# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*(1993, ஆகஸ்ட் மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*1993, ஆகஸ்ட் மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 1.00

## 1993 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[1993, ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 92/92

### 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவானது அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பந்தியின் உட்பந்தி (LXI) என்பதில் "இறப்பர் ஆராய்ச்சிச் சபையின் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இறப்பர் ஆராய்ச்சிச் சபையின் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பந்தியின் (LXII) என்னும் உட்பந்தியில். "புத்தசாசன நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புத்தசாசன நிதியத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "புத்தசாசன நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புத்தசாசன நிதியத்தின் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பந்தியின் (LXII) என்னும் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(LXIII) 1988 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க, ஜே. ஆர். ஜயவர்தன நிலையச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஜே. ஆர். ஜயவர்தன நிலையத்தின்; அத்துடன்

(LXIV) 1981 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கை வழங்கல், பொருட்கள் முகாமைத்துவ நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வழங்கல், பொருட்கள் முகாமைத்துவ நிறுவகத்தின்.".

3. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அலுவலக முறையான வேதனங்களும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1993 மார்ச் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான அலுவலக முறையான வேதனங்களும்" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

# 1993 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[1993, ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 92/92

1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவானது அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பந்தியின் உட்பந்தி (LXI) என்பதில் "இறப்பர் ஆராய்ச்சிச் சபையின் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இறப்பர் ஆராய்ச்சிச் சபையின் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பந்தியின் (LXII) என்னும் உட்பந்தியில். "புத்தசாசன நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புத்தசாசன நிதியத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "புத்தசாசன நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புத்தசாசன நிதியத்தின் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பந்தியின் (LXII) என்னும் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(LXIII) 1988 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க, ஜே. ஆர். ஜயவர்தன நிலையச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஜே. ஆர். ஜயவர்தன நிலையத்தின்; அத்துடன்

(LXIV) 1981 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கை வழங்கல், பொருட்கள் முகாமைத்துவ நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வழங்கல், பொருட்கள் முகாமைத்துவ நிறுவகத்தின்.".

3. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அலுவலக முறையான வேதனங்களும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1993 மார்ச் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான அலுவலக முறையான வேதனங்களும்" எனும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஆஆ) 1993, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு —

(i) திரட்டு நிதியத்திலிருந்து எவரேனும் தனியாளுக்கு;

(ii) திரட்டு நிதியத்திலிருந்து ஏதேனும் கூட்டுத்தாபனத்திற்கு பாராளுமன்றத்தினால் ஆண்டுதோறும் முழுவதாகவோ பகுதியளவிலோ வாக்களிக்கப்பட்ட பணத்தொகையிலிருந்து வேதனங்களையும், ஓய்வூதியத்தையும் அல்லது ஊதியத்திலிருந்தான இலாபங்களையும், செலுத்துவதான பகிரங்க கூட்டுத்தாபனம் ஒன்றாகவுள்ள அத்தகைய ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் ஊழியருக்கு;

(iii) அரசியலமைப்பின் 154 ஆ என்னும் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட ஏதேனும் மாகாணத்திற்கான ஆளுநருக்கு;

(iv) ஏதேனும் மாகாண சபையின் எவரேனும் உறுப்பினருக்கு;

(v) ஏதேனும் மாகாண சபையின் எவரேனும் ஊழியருக்கு அல்லது ஏதேனும் மாகாணப் பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலருக்கு;

(vi) ஏதேனும் உள்ளூரதிகார சபையின் எவரேனும் உறுப்பினருக்கு;

(vii) ஏதேனும் உள்ளூரதிகார சபையின் எவரேனும் ஊழியருக்கு;

(viii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தின் ஊழியர் ஒருவருக்கு;

(ix) 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைக் கொள்கைக்கற்கைகள் நிறுவனத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தின் ஊழியர் ஒருவருக்குச்

செலுத்தப்பட்டதான அலுவலக முறையிலான வேதனங்கள், அல்லது 4(1) ஆம் (இ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஊழியத்திலிருந்துவரும் அத்தகைய ஏதேனும் ஓய்வூதியமும் அல்லது அத்தகைய எவையேனும் இலாபங்களும்;

(ஆஆஆ) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னராயினுஞ்சரி பின்னராயினுஞ்சரி, (ஆஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பிடு செய்யப்படும் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லாத வேறு ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் ஒருவராக, எவரேனும் தனியாளினால் அல்லது வேறு எவரேனும் தனியாளினால் புரியப்பட்ட கடந்தகால சேவைகள் தொடர்பில் அத்தகைய தனியாளினால் பெறப்பட்டவாறான 4(1) ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட ஊழியத்திலிருந்து வரும் அத்தகைய ஓய்வூதியமும் அல்லது அத்தகைய எவையேனும் இலாபங்களும்.”.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் “16ஆ ஆம், 16இ ஆம், 17 ஆம், 17அ ஆம்” என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக “16ஆ ஆம், 16இ ஆம், 16ஈ ஆம், 17 ஆம், 17அ ஆம்” என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், அப்பந்தியின் இறுதியில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

“(XXII) எவரேனும் ஆளினால் அத்தகைய ஆள் வைத்திருக்கும் ஏதேனும் திறைசேரி உண்டியலின் இரண்டாந்தரச் சந்தை விற்பனையின் மீதாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம்” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, “1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம்” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உஉஉ) பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் “1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதி

லாக "1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(iiஅ) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம், லொறி, வசுவண்டி, டிராக்டர், ட்ரெய்லர் அல்லது அலுவலகத் தளபாடம் அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அதனைக் கொள்வதற்கான விலையின் மீது ஆண்டொன்றுக்கு பதின்மூன்றும் மூன்றில் இரண்டு சதவீதம்;"

(3) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின் "அதன் நிருமாணம் 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முடிவடைந்ததான" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "அதன் நிர்மாணம் 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைந்ததான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அப்பந்தியின் (iii) ஆம் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(iiiஅ) அத்தகைய ஆளினால் நிர்மாணிக்கப்பட்டதும் அதன் நிர்மாணம், 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் முடிவுற்றதுமான ஏதேனும் தகைமையளிக்கும் கட்டடம், அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில் உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் அது பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அதனை நிர்மாணிப்பதற்கான செலவின் மீது ஆண்டொன்றுக்கு ஆறும் மூன்றில் இரண்டு சதவீதத்திலான விடுதொகையொன்று;".

(5) அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியில் "1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும்", என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(6) அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ivஅ) 1993 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும் 1973ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வதிவிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சி ஆதனமொன்றில் அடங்கியுள்ள வதிவற்ற இருப்பிட வசதியின் ஏதேனும் கூறு, அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட வியாபாரத்தில், தொழிலில் உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் அது பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அதனைக் கொள்ளுதற்கான விலையின்மீது ஆண்டொன்றுக்கு ஆறும் மூன்றில் இரண்டு சதவீதத்திலான விடுதொகையொன்று.".

(7) அப்பந்திக்கான காப்பு வாசகத்தில் "இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் அல்லது (ii) ஆம் உட்பந்தியில், அல்லது (iii) ஆம் உட்பந்தியில் அல்லது (iv) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் அல்லது (ii) ஆம் உட்பந்தியில் அல்லது (iiஅ) என்னும் உட்பந்தியில் அல்லது (iii) ஆம் உட்பந்தியில் அல்லது (iiiஅ) என்னும் உட்பந்தியில் அல்லது (iv) ஆம் உட்பந்தியில் அல்லது (ivஅ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(இஇ) உல்லாசத்துறைத் தொழிலை மேம்படுத்துவதற்காக, 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்டதான இலங்கை உல்லாசப் பிரயாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்கையில் மாத்திரம் இலங்கைக்கு வெளியே பிரயாணம் செய்வதில் உறப்பட்ட, செலவினத்தைத் தவிர்த்து, உல்லாசப் பயணிகளுக்கான ஏதேனும் ஹோட்டலை தொழிற்படுத்தும் ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பில் இலங்கைக்கு வெளியே பிரயாணம் செய்வதில் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;".

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "விளம்பரம் செய்வதற்காக உறப்பட்ட செலவுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விளம்பரம் செய்வதற்காக 1993 ஏப்பிறில் 1ஆம் தேதியின் முன்னர் உறப்பட்ட செலவுகள்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(3) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில் "ஏதேனும் ஆண்டில் 1987 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவ ரால் செய்து கொள்ளப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக் கங்களுக்கும் பதிலாக, "1987 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல் லது அதன் பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1ஆம் தேதிக்கு முன் னர் ஏதேனும் ஆண்டில் அவரால் செய்து கொள்ளப்பட்ட" என் னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(4) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(டட) 1993 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின் னர் ஏதேனும் ஆண்டில் அவரால் செய்துகொள்ளப் பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ்—

(i) உட்பந்தி (ii) என்பதில் குறிப்பிடு செய்யப்பட்ட உபகரணம் தவிர்ந்த ஏதேனும் பொறி, பொறித் தொகுதி பிணைச்சல்கள் அல்லது உபகரணம் தொடர்பில் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்படற்பாலதான மொத்த வாடகையின் மூன்றிலொன்றுக்குச் சமமான தொகை யொன்றை விஞ்சிய வகையில்; அத்துடன்

(ii) ஏதேனும் மோட்டார் வாகனம், லொறி, வல்வண்டி ட்ராக்டர், ட்ரெய்லர் அல்லது அதுவகை உபகர ணம் தொடர்பில் அத்தகைய உடன்படிக்கை யின்கீழ் செலுத்தற்பாலதான மொத்த வாடகை யின் ஆறிலொன்றுக்குச் சமமான தொகை யொன்றை விஞ்சிய வகையில்

அவரால் செலுத்தப்பட்ட வாடகையின் அத்தகைய பாகம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "(ட) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியல்லாத வேறு அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(ட) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அங்கிகரிக்கப் பட்ட பொறுப்பு முயற்சியல்லாத வேறு அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "(iii) ஆம் பாகத்தில் குறித்துரைக் கப்பட்ட வீதங்களில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(iii) ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்" என்னும் சொற் களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச் சட்டவாக்கத்தின் 32இஇ என்னும் பிரிவொன்றுபோன்று பயனுறுதலும் வேண்டும்— முதன்மைச் சட்டவாக்கத்தின் 32இஇ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"இலங்கைக்கு வெளியே ஏதேனும் கம்பனிக்கு பங்காண்மைக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு செலுத்தற்பாலதாகும் புனைவுரிமைத் தொகை மீதான வருமான வரி விதப்.

32இஇ. இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் கம்பனிக்கு, பங்குடைமைக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு இலங்கையிலுள்ள எவரேனும் ஆளினால் அத்தகைய கம் இலங்கையிலுள்ள எவரேனும் ஆளினால் அத்தகைய கம்பனிக்கு, பங்குடைமைக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு வந்துசேர்வதாகக் கருதப்பட்டதான புனைவுரிமைத் தொகையாக 1993 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு செலுத்தற்பாலதான மொத்த புனைவுரிமைத் தொகையானது, இச்சட்டத்தின் வேறேதும் ஏற்பாட்டில் முரணகை எது எவ்வாறிருப்பினும், பதினைந்து சதவீதம் என்ற வீதப்படி வருமானவரி அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.".

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்தியில் "1992 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

(2) அப்பந்தியின் (vi)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் —

"(vii) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு' எந்தக் கம்பனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், இரண்டு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று எழுபத்தெட்டு ரூபாவை விஞ்சாதிருக்கின்றதோ அந்தக் கம்பனி.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் அதன் (ii) ஆம் அம்சத்தை உடனடுத்துப் பின்வரும் அம்சத்தை உட்புகுத்துதல் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 33இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"(iiஅ) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 40 சத வீதப்படி முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், அதன் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

"(iiஅ) பெறப்பட்டதான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் முற்பணைக் கம்பனிவரி 40 சத வீதப்படி பெறப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள்;"; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "(ஈ) என்னும் பந்தியின் (ii) ஆம் அல்லது (iii) ஆம் அல்லது (iv) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "(ஈ) என்னும் பந்தியின் (ii) ஆம் அல்லது (iiஅ) என்னும் அல்லது (iii) ஆம் அல்லது (iv) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும்" என்னும் சொற்களையும் இலக்கங்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவைத் திருத்துதல்

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அதற்குச் சமமான தொகையைக் கொண்ட நிவாரணத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதற்குச் சமமான தொகையைக் கொண்ட நிவாரணத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆயினும் எவ்வாறாயினும் அத்தகைய ஆள் அல்லது அத்தகைய பங்குடைமை, அத்தகைய வேறு நாட்டில் அத்தகைய நேரொத்த காலப்பகுதிக்கு அத்தகைய இலாபங்களினதும் வருமானங்களினதும் தொடர்பில் வருமானவரி செலுத்துவதற்கு ஆளாகாதவிடத்து, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கான அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் தொடர்பில் இலங்கையில் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் தொகைக்குச் சமமான நிவாரணத்துக்கு அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை உரித்துடையவராதல் வேண்டும்."

(2) (i) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் :—

(அ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் பந்தியில் "வெளியே பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்குடைமைக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வெளியே பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்குடைமைக்கும்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியில் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(iii) இலங்கையின் கட்டடக்கலை சார்ந்த, பொறியியல், கணிய மதிப்பீடு அல்லது நிர்மாண முகாமைத்துவ சேவைகளையும் அத்துடன் அவற்றிலிருந்து துணை நிலையாகக்கூடியவாறான அத்தகைய வேறு சேவை

களையும் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட வதிவற்ற எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு வழங்குகின்றதான அல்லது வழங்குவதான எவரேனும் வதிவற்ற ஆளுக்கும் அல்லது இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்குடைமைக்கும்.".

(ii) அந்த (2) ஆம் உட்பிரிவில் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "(அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "(அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் அல்லது (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவுக்கான அட்டவணைக்குப் பதிலாக, பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"அட்டவணை

| நிரை I<br>திறைசேரி உண்டியல் | நிரை II<br>வரி விதம் |
|---|---|
| எந்தத் திறைசேரி உண்டியல் அது வழங்கப்பட்ட தேதியின் பின்னர் பன்னிரண்டு மாதங்களில் முதிர்ச்சியடைகின்றதோ அந்த ஏதேனும் திறைசேரி உண்டியல். | அத்திறைசேரி உண்டியலின் முகப் பெறுமதியின் 2 சத விதம். |
| எந்தத் திறைசேரி உண்டியல் அது வழங்கப்பட்ட தேதியின் பின்னர் ஆறு மாதங்களில் முதிர்ச்சியடைகின்றதோ அந்த ஏதேனும் திறைசேரி உண்டியல். | அத்திறைசேரி உண்டியலின் முகப் பெறுமதியின் 1 சத விதம். |
| எந்தத் திறைசேரி உண்டியல் அது வழங்கப்பட்ட தேதியின் பின்னர் மூன்று மாதங்களில் முதிர்ச்சியடைகின்றதோ அந்த ஏதேனும் திறைசேரி உண்டியல். | அத்திறைசேரி உண்டியலின் முகப் பெறுமதியின் 0.5 சத விதம்,". |

17. அத்தியாயம் XVஆ என்பதனை உடனடுத்து பின்வரும் அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் "XVஇ" என்றாற்போன்று பயனுறுதல் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் அத்தியாயம் XVஇ என்னும் புதிய அத்தியாயமொன்றை உட்புகுத்துதல்.

"அத்தியாயம் XVஇ

ஊழியர்கள் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநரால் செலுத்தப்பட வேண்டிய வரி தொடர்பிலான விசேட ஏற்பாடுகள்.

ஊழியரின் வருமானவரி குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநர்களால் செலுத்தப்பட வேண்டும் என்பது

113க. (1) இரண்டாம் பிரிவிலும், அத்தியாயங்கள் XIV அத்துடன் XV என்பவற்றிலும் அடங்கியுள்ள ஏது எவ்வாறிருப்பினும், 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநரின் ஊழியரின் அவ்வலக முறையான வேதனதிகளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான வருமான வரியானது அத்தகைய தொழில் தருநரால்

வேறுவகையாக செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரிக்கு மேலதிகமாக அத்தகைய தொழில் தருநரால் செலுத்தப்பட வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநரால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமானவரி, மாதாந்த தவணைகளில் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, பிரிவு 98, பிரிவு 99, பிரிவு 102, பிரிவு 105, பிரிவு 106, பிரிவு 107, பிரிவு 110, பிரிவு 112 என்பவற்றின் ஏற்பாடுகள் அத்தகைய தொழில்தருநரால் செலுத்தப்படற்பாலதான அத்தகைய வருமான வரிக்கு ஏற்புடையதாதலும் வேண்டும். ஆயினும், மேற்கூறப்பட்ட பிரிவுகளில் காணப்படும் "கழித்தல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "செலுத்துதல்" என்னும் சொல்லும், "ஊதியம்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "அலுவலக முறையான வேதனாதிகள்" என்னும் சொற்களும் என்றாற்போன்ற திரிபுகளுக்கு அமைவாகப் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

எந்த ஊழிய வருமானம் தொடர்பில் வரி செலுத்தப்படுகின்றதோ அந்த ஊழிய வருமானத்தை மொத்த நியதிச்சட்ட வருமானம் உள்ளடக்க மாட்டாது.

113ங. இருபத்தேழாம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரின் எவரேனும் ஊழியரின் மொத்த நியதிச்சட்ட வருமானமானது, எந்த ஊழியம் தொடர்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு, 113க என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தொழில்தருநரால் வரி செலுத்தப்படற்பாலதாகின்றதோ, அந்த ஊழியம் தவிர்ந்த அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் ஒவ்வொரு மூலங்களிலுமிருந்து அவரது நியதிச் சட்ட வருமானத்தின் கூட்டுமொத்தமாதல் வேண்டும்.

31(2) (ஐ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்படும் தகைமையளிக்கும் கொடுப்பனவுக்கு எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரின் எவரேனும் ஊழியரின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

113ஞ. இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் அடங்கியிருக்கும் எது எவ்வாறிருப்பினும், 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரின் எவரேனும் ஊழியரின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து, 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (ஐ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுவதும் அத்தகைய ஊழியரால் அந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்டதுமான ஏதேனும் தகைமையளிக்கும் கொடுப்பனவு தொடர்பில் 30 (2) ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி கழிப்பனவாக அனுமதிக்கப்பட வேண்டும் என்பது.

113ட. இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 113க என்னும் பிரிவிற்கிணங்க எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியானது, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தொழில் தருநரால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வியாபாரத்தின் அல்லது தொழிலின் இலாபங்களையும் வருமானத்தையும் ஆய்ந்தறிகையில் கழிப்பனவொன்றாக அனுமதிக்கப்படல் வேண்டும்.

வருமான வரியைக் கணித்தல்

113ண. இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநரின் எவரேனும் ஊழியர் தொடர்பில் அலுவலகமுறையான வேதனாதிகளுக்கு ஏற்பிக்கூறப்படற்பாலதான வருமானவரியானது —

(i) அத்தகைய ஊழியரின் அத்தகைய வேதனாதிகளிலிருந்து நாற்பத்திரண்டாயிரம் ரூபா பணத்தொகையொன்றை கழிப்பனவுசெய்த பின்னர் அத்தகைய வேதனாதிகள்மீது இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் IIஉ என்னும் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின் படி கணிப்பிடப்பட்ட வருமான வரியின் மேலான;

(ii) ஆயிரத்து எண்ணூறு ரூபாவை

விஞ்சுதொகையாதல் வேண்டும்.

குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரால் செலுத்தப்பட்ட வருமானவரி ஊழியத்திலிருந்துவரும் இலாபத்தின் பாகமாக அமைதல் ஆகாது.

113த. நான்காம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், குறித்துரைக்கப்பட்ட எவரேனும் தொழில்தருநரின் எவரேனும் ஊழியரின் அலுவலகமுறையான வேதனாதிகள் தொடர்பிலானதும் அத்தகைய தொழில்தருநரால் செலுத்தப்படுகின்றதுமான வருமானவரி, அத்தகைய ஊழியரின் ஊழியத்திலிருந்தான இலாபங்களின் பாகமாக அமைவதாகக் கருதப்படுதலாகாது.

இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக —

"ஊழியர்" என்பது எவரேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநர் தொடர்பில் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழில் தருநரின் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் ஒருவரை உள்ளடக்கும்.

"குறித்துரைக்கப்பட்ட தொழில்தருநர்" என்பது பிரிவு 9(1)(ஆஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றைத் தவிர்ந்த பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்று எனப் பொருள்படும்".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூதலாவது அட்டவணையைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாவது அட்டவணை அவ் வட்டவணையின் III ஆம் பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் பாகத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"பாகம் III

இலங்கைப் பிரசை அல்லாதவரும் 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட் பிரிவின்கீழ் வதிவற்ற ஒருவராகக் கருதப்படுபவருமான எவரேனும் தனியாளுக்கு ஏற்புடைத்தான வருமான வரி வீதங்கள்—

1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு 25 சத வீதம்.

1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங் கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு 15 சத வீதம்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத் தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அட்டவணையின் I ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் பாகத்தை இடுவதன் மூலமும்—

"பாகம் I

பாகம் II இல் அல்லது பாகம் III இல் அல்லது பாகம் IV இல் அல்லது பாகம் IVஅ என்பதில் அல்லது பாகம் IVஆ என்பதில் அல்லது பாகம் V என்பதில் அல்லது பாகம் Vஅ என்பதில் அல் லது பாகம் Vஆ என்பதில் அல்லது பாகம் VI இல் அல்லது பாகம் VIII இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு கம்பனி தவிர்ந்த இலங்கையில் வதிவுள்ள கம்பனி அல்லது பாகம் IX இல் குறிப் பீடுசெய்யப்பட்ட (இலங்கை மத்திய வங்கி தவிர்ந்த) பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது பாகம் X இல் குறிப்பீடுசெய்யப் பட்ட கூறுநம்பிக்கைப்பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம்,

1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு வருமான வரிவீதம்—

கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின்மீது 50 சத வீதம்.".

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியில் தொடங்கும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு வருமான வரி வீதம்

கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீது 45 சத வீதம்.".

(2) அட்டவணையின் பாகம் IVஆ என்பதில் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் வருமானவரி வீதம்" என்னும் சொற் களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு வருமான வரி வீதம்—" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(3) அட்டவணையின் IVஆ என்னும் பாகத்தை உடனடுத்து பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும்—

"பாகம் IVஇ

சிறிய கம்பனி

1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் வருமானவரி வீதம்—

(1) கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானம் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததாயின்—

கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின்மீது 33 1/3 சத வீதம்.

(2) கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானம் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சுவதும் இரண்டு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று எழுபத்தெட்டு ரூபாவை விஞ்சாததுமாயின், வரியானது—

(i) இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவின் 33 1/3 சதவீதத்துக்குச் சமமான தொகையொன்றினதும், அத்துடன்

(ii) கம்பனியின் வரிவிதிக்கப்பாலதான வருமானம் எந்தத் தொகையால் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சுகின்றதோ அந்தத் தொகையினதும்,

கூட்டுமொத்தமாதல் வேண்டும்.".

(4) அட்டவணையின் Vஆ என்னும் பாகத்தில் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனியும், எக்கம்பெனி தொடர்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டில் இறுதித்திகதியன்று," என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் விலைகோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனியும் எக்கம்பனி தொடர்பில் 1993 மார்ச் 31 ஆம் தேதியன்று உள்ளவாறு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(5) அட்டவணையின் VI ஆம் பாகத்தில் "1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(6) அட்டவணையின் பாகம் VII இல் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(7) அட்டவணையின் பாகம் IX இல் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(8) அட்டவணையின் பாகம் X இல் "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(9) பாகம் X என்பதனை அடுத்து பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும்—

"பாகம் XI

(இலங்கை மத்திய வங்கி தவிர்ந்த) கூறு நம்பிக்கைப் பொறுப்பும், பரஸ்பர நிதியமும் அத்துடன் பகிரங்கக் கம்பனியும் உட்பட்ட, ஆனால் பாகம் IV இ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட சிறிய கம்பனி உட்படாத கம்பனி,

1993 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும்—

கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான
வருமானத்தின் மீது 40 சத வீதம்".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றும் அட்டவணையைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றும் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வட்டவணையின் 1ஆம் பந்தியில், "1992 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்பதிலிருந்து அப்பந்தியின் முடிவு வரையுள்ள சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்:—

"1992 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு—

வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதலாவது
25,000 ரூபா மீது — 30 சத வீதம்.

வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 25,000 ரூபா மீது — 40 சத விதம்.

வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மிகுதியின் மீது— 45 சதவிதம்.

1993 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு—

வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதலாவது 25,000 ரூபா மீது — 30 சத விதம்.

வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மிகுதியின் மீது— 40 சத விதம்.".

(2) அட்டவணையின் II ஆம் பந்தியில்—

(i) அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:—

"(இ) 1992 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு—

(i) வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீது— 45 சத விதம்.

(ii) இலாபங்களின் மிகுதியின்மீது— அவற்றிலிருந்து (i) ஆம் பந்தியின் கீழ் செலுத்தற்பாலதான வரியைக் கழித்த பின்னர் 25 சத விதம்.".

(ii) அப்பந்தியின் (இ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(ஈ) 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு—

(i) வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீது — 40 சதவிதம்.

(ii) இலாபங்களின் மிகுதியின் மீது, அவற்றிலிருந்து (i) ஆம் பந்தியின்கீழ் செலுத்தற்பாலதான வரியைக் கழித்த பின்னர் 25 சத விதம்.".

**முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.**

**21.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணை இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:—

"ஏழாம் அட்டவணை

பிரிவு 33அ(1)

1988 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1992 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் மூறபனைச் சர்ப்பவரி வரி விதங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்படும் தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது —

25 சத விதம்.

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றால் அல்லது மக்கள் கம்பனியொன்றால் செய்யப்படும் தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது —

33 1/3 சத விதம்.

(iii) கூறுநம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது ஒரு சிறிய கம்பனியைத் தவிர்ந்த வேறு கம்பனி ஒன்றினால் அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது —

50 சத விதம்.

1992 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு முற்பணக் கம்பனி வரிவீதங்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது —

25 சத விதம்.

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையின்மீது —

33 1/3 சத விதம்.

(iii) கூறுநம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் அல்லது பரஸ்பர நிதியத்தால் அல்லது சிறிய கம்பனியொன்றைத் தவிர்ந்த வேறு கம்பனியொன்றினால் அல்லது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனியொன்றினால் அல்லது மக்கள் கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது —

40 சத விதம்.

1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் முற்பணக் கம்பனி வரிவீதங்கள் வருமாறு :—

(i) சிறிய கம்பனியொன்றினால் செய்யப்பட்ட தகைமைபெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது —

25 சத விதம்.

(ii) கூறுநம்பிக்கைப் பொறுப்பு ஒன்றினால் பரஸ்பர நிதியத்தால் அல்லது ஏதேனும் சிறிய கம்பனி தவிர்ந்த கம்பனியால் செய்யப்பட்ட தகைமை பெறும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது —

33 1/3 சத விதம்.".

**கடந்த காலத்தை உள்ளடக்கும் சட்டப் பயன்.**

22. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈஈஈ என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட ஏதேனும் கம்பனி 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அமைச்சரால் அங்கீகரிக்கப்படுமிடத்தும், அத்துடன் அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கசெற்றில் வெளியிடப்படுமிடத்தும் அத்தகைய கம்பனியானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 113அ என்னும் பிரிவிற்கு இச் சட்டத்தின் 16 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1993 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

23. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவல [illegible] வேண்டும்.